தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்

மரம் 22 ஏப்ரல் 2022 கனி 5



MONTHLY THE WORD OF CHRIST

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# வேதபாடம்




"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே" யோவான் 5:39

| | |
|---|---|
| பாடம் | : 28 |
| தலைப்பு | : தேவனுடைய ராஜ்யம் – Kingdom of God |
| வேத வாசிப்பு | : லூக்கா 17:20–25 |

1. தேவனுடைய ராஜ்யம் எப்போது வரும் - லூக்.17:20
2. உங்களுக்குள் இருக்கிறதே - லூக்.17:21
3. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் - மத்.6:33

குடும்பமாக
கர்த்தருடைய
பணியைச் செய்ய
ஒப்புக்கொடுக்கப்பட்ட
கிறிஸ்துவின் சபை ஊழியர்கள்
தேவை
63793 50509

இவர்களுடைய
ஊழியத்திற்காக ஜெபியுங்கள்

**R.Rajamanikkam**, Evangelist
CHURCH OF CHRIST
6/346 Jeyalakshmi Nagar
Nandampakkam -600 069
Kunrathur, KANCHIPURAM DT
Cell:93802 66192



**the word of christ** இருபத்து நான்கு மணிநேரமும் உலகமெங்கும்
**YouTube** வழியாக பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

YouTube தொடர்புக்கு: 9443558041, 6379350509







## THE WORD OF CHRIST
**Monthly Magazine**

Editor
B.ARJUNAN

### தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15

"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA

# தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
## THE WORD OF CHRIST

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 22 ஏப்ரல் - 2022 கனி - 5


ஆசிரியருரை

# தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்
# The Chosen People



**மு**தலாவது ஆண்டவர் தம்முடைய ஊழியத்தை ஆரம்பிக்கும்போது; "அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்துகொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்" (லூக்.6:13). உலக மக்களை பாவத்தின் பிடியிலிருந்து விடுவித்து தம்முடைய நித்திய வாசஸ்தலத்தில் சேர்க்கும்படியாகவும், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்பி இரட்சிக்கப்படவும் இந்த அப்போஸ்தலர்களை முதலாவது தம்முடைய ராஜ்யத்தின் பணிக்காகத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்று பேரிட்டார் எனக் காண்கிறோம். அதைத் தொடர்ந்து அநேகர் தெரிந்துகொள்ளப்படுகிறார்கள். பேதுரு தமது நிருபத்தில் எழுதும்போது; "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது; கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது" என எழுதுகிறார் (1பேது.1:2). இன்றைக்கு இவ்விதமாக தேவன் நம்மையும் தெரிந்து கொள்ளுகிறார். அழைக்கப்பட்டவர்கள் அநேகர், ஆனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர் என்ற வாக்கியத்தின்படி கீழ்ப்படிதலுக்கும் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்படுவதற்கும் சிலரே ஒப்புக்கொடுக்கிறார்கள் அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அவர்களை பரதேசிகள் என வேதம் சொல்லுகிறது.

மேலும், "ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்" (1கொ.1:27). ஆம், ஞானிகள் தங்களுடைய ஞானத்தை நம்பி மோசம்போகிறார்கள். தங்களுடைய ஞானத்திலே மேட்டிமை கொண்டு கர்த்தர் யார்? அவரை நாங்கள் விசுவாசிக்கவேண்டியதின் அவசியம் என்ன? போன்ற கேள்விகளை கேட்டு மோசம்போகிறார்கள். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுடைய பார்வையில் பைத்தியமாயிருக்கிறது என்பதை அவர்கள் அறியாதுபோகிறார்கள். ஆகையால் தேவன் தள்ளுண்டவர்களையும் பைத்தியமாக எண்ணப்படுகிறவர் களையும் தெரிந்துகொண்டு அவர்களை ஞானவான்களாக்குகிறார். அந்தப்படியாக கலிலேயரை தேவன் தெரிந்துகொண்டு அவர்கள் மூலமாக அவருடைய ராஜ்யம்

கட்டப்படுவதை விரும்பினார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படியாகவே தேவன் இவ்விதமான மக்களைத் தெரிந்துகொண்டார்.

சபையில் உள்ள தெரிந்துகொள்ளப்பட்ட சகோதரிக்கு அப்போஸ்தலனாகிய யோவான் எழுதும்போது; "தெரிந்துகொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும், மூப்பனாகிய நான் எழுதுகிறதாவது; மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத அநேக வஞ்சகர் உலகத்திலே தோன்றியிருக்கிறார்கள்; இப்படிப்பட்டவனே வஞ்சகனும் அந்திக்கிறிஸ்துவுமாயிருக்கிறான். உங்கள் செய்கையின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்" என எழுதுகிறார் (2யோவா.2,7,8). அப்போஸ்தலர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை எச்சரித்து புத்திசொல்லியிருக்கிறதை நாம் காண்கிறோம். ஏனெனில் எதிராளியாகிய பிசாசானவன் எவனை விழுங்கலாமோ என வகைதேடிச்சுற்றித்திரிகிறான் என வேதத்தில் வாசிக்கிறோம். கொஞ்சகாலம் உண்டென பிசாசு அறிந்து கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை அவர்களுக்குள்ளே அனுப்புவான். ஆகையால் அவனுடைய வஞ்சகத்தை குறித்து எச்சரிக்கையாயிருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

**பிசாசினால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்:** கள்ளக்கிறிஸ்துக்களும், கள்ளத்தீர்க்கதரிசிகளுமாயிருக்கின்றனர்; "ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்" என காண்கிறோம் (மாற்.13;22). இந்நாட்களிலும் இப்படிப்பட்டவர்களைக் காணமுடிகிறது. இயேசுவின் பெயராலே ஓநாய்கள் ஆட்டுத்தோலை போர்த்திக்கொண்டு மந்தைக்குள் வருவதைப்போல கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறார்கள். இவர்கள் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்வதாக சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். இதனால் சத்தியத்தில் நிலைத்திருக்கிறவர்கள்கூட இவ்விதமான பொய்யான அடையாளங்களையும் அற்புதங்களையும் நம்பி ஏமாற்றப்பட்டுப்போகிறார்கள். கடைசி நாட்களிலே கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்படியாக சாத்தான் இவ்விதமான கள்ளப்போதகர்களை எழுப்பிக்கொண்டு வருகிறான். இவர்களைக் குறித்தும், இப்படிப்பட்டவர்களுடைய உபதேசங்களை நம்பி மோசம் போகிறவர்களைக்குறித்தும் யூதா புத்தகத்தில் படிக்கிறோம்; "இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச் செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்" (யூதா11). மேலும் பேதுரு சொல்லும்போது; "கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்" என எச்சரிக்கிறார் (2பேது2;1). ஆதலால் நாம் செய்யவேண்டியது என்ன? "இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிலிருந்து விலகிவிழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து"... என வாசிக்கிறோம் (2பேது.3:17). ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை

விட்டுவிடாதபடி கள்ளப்போதகர்களைக்குறித்தும், கள்ளத்தீர்க்கதரிசிகளைக்குறித்தும் நாம் எச்சரிக்கையாயிருந்து அவர்களுடைய கொடிய வஞ்சகத்திலே நாம் இழுப்புண்டு போகாதபடிக்கு வசனத்தை உற்று நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய முடிவு எப்படிப்பட்டதாயிருக்கும்? தேவன் தாம் தெரிந்துகொண்டவர்களை இரட்சிக்கும்படியாக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். அந்த திட்டத்தை நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். "அவர் தம்முடைய தூதரை அனுப்பி; தாம் தெரிந்துகொண்டவர்களைப் பூமியின் கடைமுனை முதற்கொண்டு, வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச்சேர்ப்பார்" (மாற்.13:27). ஒருவரும் கைவிடப்பட்டு போய்விடக்கூடாது என்பதற்காகவே வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு வானத்தின் கடைமுனைமட்டுமுள்ள நாலு திசைகளிலுமுள்ளவர்களை கூட்டிச்சேர்ப்பார் எனக் காண்கிறோம். அப்பொழுது பல பாஷைகளைப் பேசுகிறவர்களும், பல நிறத்தவர்களும், பல நாட்டவர்களும் அவருடைய சமுகத்தில் சேர்க்கப்படுவார்கள். அந்த கூட்டத்தில் நாமும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருப்பது எவ்வளவு சந்தோஷத்தை கொண்டுவரும் என்பதை எண்ணிப்பாருங்கள். இப்பேர்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற தகுதியுடையவராக நீங்கள் இருக்கிறீர்களா? அப்படியில்லை என்றால் உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள கர்த்தருடைய வார்த்தைக்குக்குக் கீழ்ப்படிந்து அவரால் தெரிந்துகொள்ளப்பட உங்களை கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள்.

மரித்தோரின் நிலை என்ன என்ற ஒரு கேள்வி உங்களுக்கு எழும்பும். "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1கொரி.15:52). தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்; மரித்தாலும் உயிரோடிருந்தாலும் அவர்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகையில் அப்படியே எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆவி தன்னைத்தந்த தேவனிடத்திற்குக் கடந்து செல்லும். மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். லாசருவை எழுப்பும்போது அங்கே கூடியிருந்தவர்கள் நாறுமே நான்கு நாள் ஆகிவிட்டதே என்றார்கள். ஆனால் நடந்தது என்ன? லாசரு அழிவில்லாதவனாய் உயிரோடு அப்படியே எழுப்பப்பட்டான். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தில் இதைக்குறித்து நாம் வாசிக்கும்போது; "முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து, அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளி.20:6). கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானத்திலே பாவத்திற்குச் செத்து நீதிக்கு பிழைத்திருக்கிறவர்கள்மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரம் இல்லை; ஏனெனில் இவர்கள் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவோடு எழுப்பப்பட்டவர்கள். ஆகையால் இவர்கள் இனி மரிப்பதில்லை, மரணம் அவர்களை ஆண்டுகொள்ளுவதுமில்லை. அவர்கள் தேவனுக்காக பூமியிலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் நித்திய நித்தியமாக தேவனோடு என்றென்றுமாக வாழுவார்கள். அவர்களுக்கு இனி மரணம் என்பதில்லை.

இயேசுவின் இரண்டாம் வருகையின்போது என்ன நடக்கும்?


"அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து; வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" என்பார் (மத்.25:34).

நீங்கள் எங்கே நிற்கிறீர்கள்? வலப்பக்கத்திலா அல்லது இடப்பக்கத்திலா? வலப்பக்கத்தில் உள்ளவர்களுக்கு தேவனால் உண்டாக்கப்பட்ட இடம் கிடைக்கும் அவர்களுக்காக தேவன் ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருக்கிறார். அந்த ஆசீர்வாதம் உலகம் உண்டானது முதற்கொண்டு ஆயத்தம்பண்ணப்பட்ட இடம். உலகத்தில் உள்ள சிறப்பான கட்டிடங்களை கட்ட பல வருடங்கள் எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி பல வருடங்கள் கட்டப்பட்ட கட்டிடங்களை நாம் பார்க்கும்போது அப்படியே அசந்துபோய்விடுகிறோம். உலகம் உண்டானது முதற்கொண்டே நமக்காக தேவன் ஆயத்தம் பண்ணியிருக்கிற இடம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தையே சரிவர பார்க்காதவர்கள் கோடிக்கணக்கானோர் உண்டு. இந்த பூமியே இவ்வளவு அழகாக இருக்கும்போது; தேவன் தாம் தெரிந்துகொண்டவர்களுக்கு உண்டாக்கிவைத்திருக்கும் அந்த பரலோகம் எவ்வளவு அழகாகயிருக்கும் என்பதை எண்ணிப்பார்க்கும்போது நாம் அதற்கு தகுதியாக வாழ்ந்துகொண்டிருக்கிறோமா என்பதை நினைத்துப்பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களாக இருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் அவரால் நீங்கள் தெரிந்துகொள்ளப்பட கர்த்தருடைய வேதத்தை வாசித்து, மெய்யான சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியுங்கள், தேவனுடைய பிள்ளையாக மாற பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களை தெரிந்துகொள்ளுவார்.

**தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய வேலை என்ன?**

நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன் என்று சொல்லிக்கொண்டு சும்மா இருக்கும்படியாக தேவன் நம்மை தெரிந்துகொள்ளவில்லை; வேதம் சொல்லுகிறது; "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேது.2:9). அவருடைய மகத்துவங்களை அறிவிக்கும்படியாக நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருக்கிறோம்.

தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்து, அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும், சபைகள் எழுப்பவும் வழிகளை ஏற்படுத்தினார்கள். அதைப் போல ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவளும் செய்யவேண்டிய வேலைகள் நிறைய உண்டு, அதற்காக நாம் தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவின் சந்ததியாகவும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாகவும், அசுத்தமான உலகத்தில் பரிசுத்த ஜாதியாகவும், நாங்கள் அந்த கோத்திரத்தை சேர்ந்தவர்கள், நாங்கள் இந்த வகையராவைச்சேர்ந்தவர்கள் என்று சொல்லக்கூடிய இந்த உலகத்தில் நாம் அவருக்குச் சொந்தமானவர்களாகவும் இருக்கிறோம். நீங்களும் தேவனுடைய வேலையை ஏதாவது ஒருவகையில் செய்து, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்பதை நிரூபியுங்கள்.



# ராஜ்யத்தைப் பிரசங்கித்தல்

## Praching the Kingdom

-J.C.Choate

பழைய ஏற்பாடு முழுவதிலும் வரப்போகிற ஆவிக்குரிய ராஜ்யத்தைப் பற்றிய ஒரு மாபெரும் செயலாற்றல் சொல்லப்பட்டது. ஏசாயா கடைசி நாளில் கர்த்தருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என முன்னறிவித்தான் (ஏசா.2:2,3). தானியேல் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார் என்றான் (தானி.2:44). யோவேல் அந்நாட்களில் மாம்சமான யாவர் மேலும் கர்த்தருடைய ஆவி ஊற்றப்படும் என்றான் (யோவே.2:28,29), மேலும் பேதுரு: யோவேலின் தீர்க்கதரிசனம் அப்.2-ல் எழுதப்பட்டுள்ள மிகமுக்கியமான நிகழ்ச்சியில் நிறைவேற்றப்பட்டது என்றான்.

யோவான்ஸ்நானகன் வந்து பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என பிரசங்கித்தான் (மத்.3:1,2), மேலும் கிறிஸ்து தம்முடைய சமூகத்தில் நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று சொன்னார் (மாற்.9:1). கடைசியாக, கிறிஸ்து தாம் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்பது மெய் என, வெளிப்படுத்தும்படி இந்தக் கல்லின் மேல் தம்முடைய சபையை தாம் கட்டுவேன் எனச் சொன்னார் (மத்.16:18,19; 1கொரி.3:11). அவர் மனுஷருக்கும் ஸ்திரீகளுக்கும் ராஜ்யம் அல்லது சபைக்குள் பிரவேசிப்பதற்கு அவர்கள் என்ன செய்யவேண்டுமென சொல்லும் அதிகாரமாகிய பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை அப்போஸ்தலருக்குக் கொடுப்பேன் என வாக்களித்தார்.

ராஜ்யத்தின் ஸ்தாபனத்தைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள் எருசலேமில் அப்போஸ்தலர்மேல் பரிசுத்த ஆவியின் பலமாக ஊற்றப்பட்டு, இவ்விதமாக நிறைவேற்றப்பட்டது என்றும், மேலும் ஆவியானவர் அவர்களுக்கு வார்த்தையினால் பொழிந்தருளப்பட்டு அவர்கள் வெவ்வேறு பாஷைகளில், அல்லது அந்நிய பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள் என்றும் அப்போஸ்தலர் 2-ல் நாம் காண்கிறோம். இதுவே யோவான் சொல்லியிருந்ததும், பரலோகத்திலிருந்து வரப்போகிறதும், கிறிஸ்து தாம் கட்டுவேன் என்று சொல்லியிருந்ததுமான சீக்கிரமாய் ஸ்தாபிக்கப்படபோகிற ராஜ்யமாயிருந்தது. அதன்பின் அப்போஸ்தலர், பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களைப் பயன்படுத்தினார்கள் அல்லது முதன் முறையாக அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பாவியான மனிதன் எவ்வாறு இரட்சிக்கப்பட முடியும் என்பதை வெளிப்படுத்திய சபையாயிருந்தது. அதைக்கேட்டு, விசுவாசித்து, தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, தங்களுடைய பாவங்களின் மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டவர்கள் இரட்சிக்கப்பட்டு, கர்த்தர்தாமே சம்பாதித்துக்கொண்ட சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

ஆனபடியால் ராஜ்யமும் சபையும் ஒரே நிறுவனமாக, தேவனுடைய வீடாக அல்லது கிறிஸ்துவினுடைய ஆவிக்குரிய சரீரமாயிருக்கிறது (1தீமோ.3:15; 1கொரி.12:27). பவுல் கொலேசெய சபைக்கு, “இருளின் அதிகாரத்தினின்று நம்மை

விடுதலையாக்கி, நமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறேன்" என தேவனைக் குறித்து பேசி உணர்த்தினான் (கொலோ.1:13). எபிரெய ஆசிரியர், "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்" (எபி.12:28) என்றான். இப்பொழுது அவன் எந்த ராஜ்யத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தான்? தேவனுயைடய ராஜ்யம், பரலோகத்திலிருந்து வந்த ராஜ்யம், கர்த்தருடைய சபை, கர்த்தர் இரட்சித்து அதில் சேர்த்துக்கொண்ட ஜனங்களை உள்ளடக்கிய, அவருடைய சரீரத்தின் அங்கங்களாக உருவாயிருக்கின்ற, கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கின்ற, மேலும் சபையாயிருக்கின்றவற்றைக் குறித்தே பேசினான் (எபே.1:22,23; கொலோ.1:18).

அடுத்தாற்போல் கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல். கிறிஸ்துவைப்பற்றி வேதவாக்கியம், "அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" (அப்.1:3) என்று சொல்லுகிறது. வேறொரு சமயத்தில், கிறிஸ்து எருசலேமில் சீக்கிரமாய் ஸ்தாபிக்கப்படப்போகிற ராஜ்யம் அல்லது சபையைக் குறித்து அப்போஸ்தலருக்குக் கடைசி அறிவுரைகளைக் கொடுக்கின்றார். அவர் தொடர்ந்து, பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள்என்றார்" (அப்.1:8).

எனவே அப்போஸ்தலர் 2-ல் கர்த்தருடைய சபையாகிய அந்த ராஜ்யம் தேவனுக்குக் கீழ்ப்படிந்து, சேர்க்கப்பட்ட 3000 பேருடன் ஸ்தாபிக்கப்பட்டது (அப்.2:41). சுவிசேஷமானது மீண்டும் மீண்டும் எருசலேமிலும் யூதேயாவிலும் பிரசங்கிக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அதே சபையில் சேர்க்கப்பட்டனர். ஆனால் அதிகமதிகமாய் சேர்க்கப்பட்டனர். இந்தக் குறிப்பில், வேதம், "அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக்குறித்துப் பிரசங்கித்தான்" (அப்.8:5) எனக்கூறுகிறது. தொடர்ந்து நாம், "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப்.8:12) என வாசிக்கிறோம்.

எனவே நாம் என்ன அறிகிறோம்? நாம் தேவனுடைய ராஜ்யத்துக் கேற்றவைகளைக் குறித்து கர்த்தர் அப்போஸ்தலருக்கு என்ன அறிவுறுத்தினார் எனவும், அதன்பின் பிலிப்பு கிறிஸ்துவைக் குறித்து சமாரியர்களுக்கு என்ன பிரசங்கித்தான் எனவும் காண்கிறோம். ஆனால், அவன் இவ்வாறு பிரசங்கிக்கையில் அவர்களுக்கு தேவனுடைய ராஜ்யத்தை பற்றியும் பிரசங்கித்தான் என்பது ஆச்சரியமே! ஏன் அங்கு ராஜ்யம் அல்லது சபை பற்றி அதிகமுக்கியத்துவப்படுத்தப்படுகிறது? ஏனென்றால் இது மனிதவர்க்கத்திற்கென்று

தேவனுடைய முயற்சியின் மிக உன்னத கட்டமாக இருக்கிறது; இது அவர் இரட்சிப்பை அருளுவதற்கான சாதனமாகும். இது தேவனிடத்திலிருந்து வந்தது, இது தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருந்தது. கர்த்தர் இதை வாக்குப்பண்ணியிருந்தார், மேலும் அதில் இரட்சிக்கப்பட்டவர்கள் சேர்க்கப்பட்டவர்களாயிருந்தனர்! இதனுடைய முக்கியத்துவம் சொல்லிமுடியாதது!

சிலசமயங்களில் சபை முக்கியமானதல்ல என்றும் நாம் அது குறித்து அதிகம் பேசக்கூடாதென்றும் ஜனங்கள் கூறுகின்றதை நாம் கேள்விப்படுகிறோம். சபை இரட்சகர் அல்ல என்பது உண்மை, ஆனபடியினால் இது இரட்சிக்கப்பட்ட மனிதர்களால் உருவாக்கப்பட்டுள்ளது; ஆனால் கிறிஸ்துவே அதற்காக மரித்து, தம்முடைய சுய இரத்தத்தினால் அதை சம்பாதித்துக் கொண்ட சபையின் இரட்சகர், மேலும் நாம் இரட்சிக்கப்பட்டு பரலோகத்திற்குச் செல்ல விரும்புவோமானால், நாம் அதனுடைய அங்கத்தினார்களாக இருக்கவேண்டும்.

ராஜ்யம் அல்லது சபைகுறித்து சொல்லியிருக்கின்ற எல்லாவற்றையும் வேதவாக்கியங்களிலிருந்து நீங்கள் எடுத்துப் போடுவீர்களானால், எவ்வளவாய் நீங்கள் இழந்து போனவர்களாயிருப்பீர்கள்? மேலும், கிறிஸ்து சபையைக் கட்டியிருந்தால், அவரே அதன் தலைவராகவும் அதன் இரட்சகராகவும், அதனுடைய மூலைக்கல்லாக தம்மை ஒப்புவித்தவராகவும் தம்முடைய நாமத்தினால் அதனை அழைத்தவராகவும் இருக்கிறார். அவர் அதைப் பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பேன் என வாக்களித்திருப்பாரனால், சபை முக்கியமற்றது என எவ்வாறு ஒருவர் நினைக்க முடியும்? மேலும் நாம் உலகத்திற்கு இதை பிரசங்கியாவிட்டால் இதைப்பற்றியும், இதனுடைய தெய்வீக ஆரம்பத்தினைப் பற்றியும், இதனுடைய நோக்கத்தைப் பற்றியும், இதன் ஊழியத்தைப் பற்றியும், இது தேவனுடைய ஒட்டுமொத்த திட்டத்தில் இதன் முக்கியத்துவத்தின் பிரமாண்டமான ஸ்தானத்தைப் பற்றியும் மனுஷர் எவ்வாறு அறிவார்கள்?

இறுதியாக, நாம் சபையை உயர்வாக மதிப்போமாக, கர்த்தர் அன்பு கூருகிறவண்ணம் நாமும் அன்பு கூருவோமாக, அதிலுள்ள அங்கத்தினர்களுக்காக நன்றியுள்ளவர்களாயிருப்போமாக, மேலும் நாம் மிக ஆர்வத்துடன் மற்றவர்களுக்கு இதைப் பற்றிக் கூறுவோமாக அப்போது தான் முழு உலகமும் இந்த ராஜ்யம் உண்மையாகப் பரவும். பவுல் கூறியது போல், ‘‘சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதா காலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்’’ (எபே3:21)

## தெரிந்து கொள்ளுவோம்

*- K.R.K.Ravi Asir*

- *கனடாவின் பழைய பெயர் கோல்டு கோஸ்ட்.*
- *உலகிலேயே அதிக வகையான **3500** ஆர்க்கிட் மலர்கள் பிரேசில் நாட்டில் உள்ளது.*
- *தாய்லாந்து நாட்டின் பழைய பெயர் சயாம்.*
- *ஆங்கில அகராதியை முதலில் தயாரித்தவர் சாமுவேல் ஜான்சன்.*
- *முதன் முதலில் அஞ்சல் அட்டையை அறிமுகப்படுத்திய நாடு ஆஸ்திரியா.*
- *ஆங்கில நகைச்சுவை வார இதழ் **17.07.1841** அன்று வெளியானது.*

**வேதாகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**
**ஆம் எனில் ☑ குறியிடவும்**



*தற்சோதனை பகுதி - 43*

**43. ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிற எச்சரிப்பு என்ன?**

1. நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் ☐ வசன ஆதாரம் ---------
2. அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதிக்கக்கூடாது ☐ வசன ஆதாரம்----------
3. நீ மரணபரியந்தம் உண்மையாயிரு ☐ வசன ஆதாரம்----------
4. ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவான் ☐ வசன ஆதாரம் ----------------------------------
5. ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுப்பேன் ☐ வசன ஆதாரம்----------------------------------
6. பாலாக் என்பவனுக்கு போதனை செய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்தில் இல்லை ☐ வசன ஆதாரம்-
7. நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன் ☐ வசன ஆதாரம்-
8. உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொள்ளாதிருந்தாலும் பரவாயில்லை ☐ வசன ஆதாரம்----------------------------------
9. நீ உயிருள்ளவனென்றும் பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய் ☐ வசன ஆதாரம்--------------------------
10. ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடுவேன் ☐ வசன ஆதாரம்----------------------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதைக் கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை ஜெராக்ஸ் எடுக்கலாம் ஆனால் வெட்டியெடுப்பது குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**




**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**
*Contact Us: 94435 58041*

'ஒரே வழி' தபால் வழி வேதபாடம் **The Master Course** படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate** பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5,**
**Batlagundu-624 202, South India.**

பெண்கள் பகுதி



நான் எந்த சமயத்தைப் பின்பற்றுகிறேன்
என்பது குறித்து கவலையில்லை
It`s Doesn`t Matter Which Religion I Follow -Betty

-சென்றமாத இதழின் தொடர்ச்சி

வியாதியுடன் இருப்பதாக கூறின கிறிஸ்தவர்களைச் சந்திக்க தானாக முன்வருபவர்கள் அழைக்கப்பட்டனர்.

**டாம்:** வேண்டாம், என்னை அழைக்காதீர்கள் எனக்கு என்ன சொல் லுவதென்று தெரியாது. மேலும், நோய் என்னை சோர்வடையப் பண்ணுகிறது"

**ஸ்காட்:** நான் போகிறேன். ஒருவேளை என்னால் சில உதவி செய்யமுடியும். வியாதியஸ்தர்களைப் பார்ப்பதினால் என்னுடைய உடல் நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது என்று நான் எவ்வளவு நன்றியுள்ளவனாயிருப்பது எத்தனை அவசியம் என என்னை அதிகமாக நினைவு படுத்துகிறது மேலும் படுக்கையில் படுத்துக் கொண்டு, வேதனையை அநுபவித்துக் கொண்டு, யாராவது வந்து போதுமான அளவு பராமரிப்பார்களென்றால் அது ஆச்சரியமாயிருக்கும் என்பவர்களை பார்க்கவேண்டியது என்னுடைய வேலையாயிருக்கிறது"

**வாழ்வினாலும் சாவால்களினாலும் களைப்பு**

**பெத் கேள்விப்பட்டதை குறிப்பிடுகிறாள்:** "நான் ஒவ்வொன்றினாலும் மிகவும் சோர்ந்து போய் கொண்டிருக்கிறேன். கால அட்டவணையை வைத்துக்கொண்டிருக்க வேண்டியது, சவால்கள், செலுத்தவேண்டிய ரசீதுகள். நான் பிடித்துக் கொள்வது, ஒருபோதும் முடியாதது, கூடுதல் நேரத்தை ஒருபோதும் பெற்றிருக்காதது அல்லது பணம்; ஒவ்வொன்றும் சரியான போராட்டம் போல் காண்கிறேன்".

**அனிதா புன்முறுவல்செய்தாள்:** சில நேரங்களில் நான் நினைக்கிறேன், நான் மிகவும் சோர்வாக இருப்பதைப் போலவும், இதைவிட்டு நான் உடனே வெளிவர முடியுமென நான் விரும்புகிறேன்", ஆனால் பின்பு என் குடும்பத்தில் மிக மோசமான நிலையில் வியாதியுள்ள சிலரை கவனிக்கவேண்டும், அல்லது எனது கணவர் வெளியூர் சென்றுள்ளார், அல்லது மகனை அல்லது மகளை பயங்கரமான நிலையில் என் குடும்பங்களில் இழந்திருக்கிறேன் அல்லது எங்கள் குடும்பங்கள், தேவனை விட்டு விலகிப் போயிருக்கிற குழந்தைகள் அல்லது இப்படிப்பட்ட உலகப்பிரகாரமான வாழ்க்கை வாழ்கின்றனர், அதன்பின் நான் இவ்வூழியத்தை எவ்வளவு சந்தோஷமாக செய்யவேண்டியவளாய் இருக்க வேண்டும் என நான் அறிகிறேன், எனக்கு எந்த ஒரு உண்மையான பிரச்சனை அல்லது வாழ்வதற்கான பெரிய கவலை ஒன்றையும் கொண்டவளாயிருக்கவில்லை ஆகவே கவலைப்படுவதின் மூலமும் சிறிய காரியங்களைக் குறித்து புகார் செய்து கொள்வதின் மூலமும் எனது சொந்த கஷ்டத்தின் சூழலை உருவாக்குகிறேன். அதன் பின் அது எவ்வளவு சிறிய விஷயம் என வெட்கப்பட்டேன். நான் பெற்றுள்ள

எண்ணிலடங்கா ஆசீர்வாதங்களை உணர்ந்து பார்க்க உதவும்படி தேவனை நோக்கி ஜெபிக்கிறேன், அதற்குமுன் நான் என்னுடைய மனோநிலையினிமித்தம் இவைகளை இழந்திருக்கக் கூடும்.

நீங்கள் முற்றிலும் எதிர்மறையான மனோபாவத்தையும் ஒரே சூழ்நிலை விளைவின் பயனைப் பிறப்பித்ததையும் இது வாழ்க்கை முறையில் விவரிக்கப்பட்டுள்ளதையும் பார்த்தீர்களா? இல்லை, இது உண்மையான சந்தர்ப்பம் அல்ல அல்லது பயங்கரமானது அல்லது நல்ல சமயங்கள் அல்லது அவைகளின் இழப்பு இவைகளெல்லாம் நம்முடைய வாழ்வை வடிவமைக்கிறது இது நமது வழியில் வருகிற ஒவ்வொரு நிகழ்வுக்குமான நேரடியான பதிலில் நம்முடைய சொந்த மனோபாவம் உள்ளது. நாம், நாமே இது ஆசீர்வாதமாக இருக்கும் அல்லது சாபமாக இருக்கும். நாம் வளர்ச்சியடைவோம் அல்லது இதனால் வறண்டு போய்விடுவோம் என தீர்மானிக்கிறோம்.

**மோசே சொன்னார்:** "இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் வைக்கிறேன், இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந் தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாவிட்டால்.... சாபமும் வரும்" (உபா.11:26,27) என்றார்.

கற்பனைகள் எல்லா ஜனங்களுக்கும் ஒரேமாதிரியாக இருந்தது; ஆசீர்வாதம் ஒருவர் வாழ்விலும் சாபம் இன்னொருவர் வாழ்விலும் இருந்தது; இந்த வித்தியாசம் அவர்களது கற்பனைகளுக்கு பிரதிக்கிரியையாக இருந்தது.


**பவுல் சொன்னார்:** "கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற் கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவவாசனையாகவும் இருக்கிறோம்" (2கொரி.2:16).

கிறிஸ்தவனும் அவனுடைய செய்தியும் பலவருடங்களாக ஒரே விதமாக நிலைத்திருக்கிறது வேறுபட்ட செய்தியை கேள்விப்படுகிறவர்களில் மட்டுமே இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் எப்படி கேள்விப்படுகிறோம், நாம் எப்படி பதிலளிக்கிறோம் என்பனவற்றில் கவனமாயிருக்கவேண்டும். நம்முடைய மனோநிலைகள் பரலோகத்திற்கு அனுப்பப்படும் அல்லது நரகத்திற்கு அனுப்பப்படும். நாம் அவர்கள் மேலும் நம்முடைய பாதுகாப்பில் மிக ஜாக்கிரதையாக இருக்கமுடியாது.

## நான் யார்? – Who Am I?

- நான் காவலில் வைக்கப்பட்டேன்
- என்னைப் பார்க்கிலும் ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை
- என் காலம் வரை நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனவாக்கியங்களும் வழங்கப்பட்டு வந்தது
- நான் ஒட்டகமயிர் உடையைத் தரித்தேன்
- என் தாய் தகப்பன் இருவரும் ஆசாரிய குடும்பத்தைச் சார்ந்தவர்கள்
- என் தலையை வெட்டி ஒரு சிறுபெண்ணுக்கு கொடுத்தார்கள்
- என் உடலை என் சீஷர்கள் எடுத்து அடக்கம்பண்ணினார்கள்






## வேதவாக்கியங்களின்படி கிறிஸ்துவின் சபையாரின் அமைப்பு

- Jim Massey

*– மொழியாக்கம் சகோ.ரவிஆசீர்*

பாடம் 24

**மூப்பர்களுக்கான தகுதிகள் (III)**

**வரைகுறிப்பு**

1. சண்டை பண்ணாதவன் (சீக்கிரம் கோபம் கொள்ளாதவன்)
2. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்
3. சகல நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளையுடையவன்
4. நூதன சீஷனாயிராதவன்
5. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன்
6. தேவனுடைய ஒரு உக்கிராணக்காரன்

**கலந்துரையாடல்**

**1. சண்டை பண்ணாதவன் (சீக்கிரம் கோபம் கொள்ளாதவன்).**

1 தீமோ.3:3 சொல்கிறது, ஒரு மூப்பனானவன் சண்டை பண்ணாதவனாய் இருக்க வேண்டும் என்று தீத்து 1:7 உரைக்கிறது. அவன் கோபமில்லாதவனாய் இருக்க வேண்டும். அவன் தன்னுடைய எரிச்சலை கட்டுப்படுத்துகிறான். அவன் கோபத்துடனே பேசுகிறதில்லை அல்லது கோபத்துடனே செயல்படுகிறதில்லை. அவன் சமாதானமாய் இருக்கிறவனும், சமாதானம் பண்ணுகிறவனுமாயிருக்கிறான். இயேசுவானவர் சமாதானம் பண்ணுகிறவர்களை ஆசீர்வதித்தார் (மத்.5:9) கிறிஸ்தவர்கள் சகல மனுஷரோடும் சமாதானமுள்ளவர்களாய் ஜீவிக்க வேண்டியதாயிருக்கிறது (ரோமர் 12:18). அவர்களுக்கு இருக்கிற தேவஞானம் அவர்களுக்கு சாந்தகுணத்தையும், இரக்கத்தையும் அளிக்கிறது. அவர்கள் நீதியின் கனியை சமாதானத்திலே விதைக்கிறவர்கள். அவர்கள் சமாதானம் பண்ணுகிறவர்களாயிருக்கிறார்கள் (யாக்.3:17,18) "சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது, ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே.4:31,32) என்று நமக்கு கட்டளை இடப்பட்டிருக்கிறது.

"யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயுமிருக்கக்கடவீர்கள்" (யாக்.1:19) என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. சச்சரவை உண்டுபண்ணக்கூடிய ஒரு மனுஷன் சண்டை அல்லது மோதலை விரும்புகிறவனாயிருக்கிறான். அவன் ஒழுங்கின்மையையும், சண்டையையும் கொண்டு வருகிறதற்கு அறியப்பட்டவனாயிருக்கிறான். ஒரு மூப்பரானவர் சமாதானமுள்ளவராயிருப்பதற்கும் சாந்தகுணமுள்ளவராயிருப்பதற்கும் ஒரு முன்மாதிரியாய் இருக்கும்படி தெரிந்து கொள்ளப்படுகிறார். அவர் ஒரு சண்டை செய்கிறவராகவோ அல்லது விரைவில் கோபம் கொள்ளுகிறவராகவோ இருக்கிறதில்லை.

**2. தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவன்.**

ஒரு மூப்பரானவர் ஒரு நல்ல கணவராகவும், ஒரு நல்ல தகப்பனாகவும் இருக்கிறார். அவருடைய குடும்பம் தேவபக்தி உள்ளதாய் இருக்கும்படி அவருடைய

நற்குணாதிசயம் செல்வாக்கு உடையதாயிருக்கிறது. ஒரு மனுஷனுடைய குடும்பம் மற்ற எவர் ஒருவரை பார்க்கிலும் அவரை இன்னும் அதிகமாக கண்டும், அறிந்தும் இருக்கிறது. ஆகையால் அவர்கள் அவருடைய குணாதிசயத்தை குறித்த காரியத்தில் ஒரு நல்ல அல்லது தீய சிபாரிசு ஆக இருக்கிறார்கள். 1தீமோ.3:5 சொல்கிறது. ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால் அவன் தேவனுடைய சபையை விசாரிக்க முடியாது குடும்பமும், சபையும் கிறிஸ்தவ விதிமுறைகளின்படி வழிநடத்தப்படுகிறது. ஒரு மனுஷனுடைய முன் உதாரணம் மற்றும் திறமை அவனுடைய குடும்பத்தினால் அறியப்படக் கூடியதாய் இருக்கிறது ஒரு மனுஷன் தன்னுடைய குடும்பத்தில் நல்ல செல்வாக்கை உண்டாக்க இயலாமல் இருப்பானேயாகில், அவன் தன்னைக் குறித்து ஒரு மூப்பராக தகுதியுள்ளவனாகிறதற்கு இயலாதவனாக இருக்கிறான் என்பதை வெளிப்படுத்தி இருக்கிறான். கொர்நேலியு தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனாயிருந்தான் (அப்.10:2).

சரியானதை செய்யும் விருப்பத்தில், அவனுடைய முன் மாதிரியை அவனுடைய குடும்பம் மதித்து அவனுடைய முன்மாதிரியைப் பின்பற்றியது. ஒரு மூப்பர் தன்னுடைய ஆலோசனையை மற்றவர்களுக்கு கூறத்தக்கதாக குடும்பத்தின் உபத்திரவங்களில், குடும்பத்தை நன்கு ஒழுங்குபடுத்துகிறவனாக இருக்க வேண்டும். ஆசாரியனாகிய ஏலி தன்னுடைய குமாரர்களை நன்கு ஒழுங்குபடுத்தாததினாலே தண்டிக்கப்பட்டான் (1சாமு.3 :13). ஆகையால் மனுஷர்கள் முதலாவது தேவனுடைய குடும்பமாக சபையில் கண்காணிகளாக தகுதியடையும்படியாக தங்களுடைய சொந்த குடும்பங்களில் தங்களை நிரூபணம் செய்து கொள்ள வேண்டும்.

**3. சகல நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளையுடையவன்**

மேலே விவாதிக்கப்பட்ட அத்தியாவசியமான தேவையைத் தொடர்ந்து இது வருகிறது. ஒரு மூப்பருடைய பிள்ளைகள் சகல நல்லொழுக்கம் உடையவர்களாகவும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் (1தீமோ.3:4) "அவர்கள் துன்மார்க்கரென்றும், அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளாய் இருக்க வேண்டும்" (தீத்து 1:6) இதனால் ஒரு மூப்பருடைய பிள்ளைகள் அவரை தகுதியடைய அல்லது தகுதியை இழக்க உதவி செய்கிறவர்களாய் இருக்க முடியும். பிதாக்களும் தங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்க்க வேண்டும் (எபே.6:4)

ஒருவர் தன் சொந்த பிள்ளைகளுக்கு எப்படி போதிக்கிறார் என்பதன் மூலம் அவர் எவ்வளவு நல்ல முறையில் போதித்து மற்றவர்களை எப்படி ஒழுங்குபடுத்த முடியும் என்பதை வெளிப்படுத்துகிறார். அவர் கோபாக்கினையை கொண்டு வரும்படியாக கண்காணிக்க வேண்டாம், ஆனால் அவர் மிகுந்த அன்புடன் கவனமாக வளர்ச்சிக்கு உதவும்படியாக சிட்சிக்க வேண்டும் ஒரு தகப்பனாக பொறுப்பேற்று நடந்தும் நிலை ஒரு மூப்பராக பொறுப்பேற்று நடத்தும் ஒரு மனுஷனுடைய நிலையை பரிசோதிக்கிறது. ஒரு மனுஷனுடைய பிள்ளைகள் கலகம் பண்ணுகிறவர்களாகவும், கட்டுப்பாடற்ற பிள்ளைகளாகவும் இருப்பார்களேயாகில், அது அவர்களுடைய தகப்பன் கீழ்ப்பட்டிருப்பதை எவ்வாறு உருவாக்குவது என்பதை அறியாதவராக இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறது. ஆகையால் அவர் ஒரு பிராந்திய சபையை கண்காணிக்கிறதற்குரிய தகுதியை அடையாமல் இருக்கிறார். ஒரு மூப்பர் தன்னுடைய பிள்ளைகள் சகல நல்லொழுக்கமும் கீழ்ப்படிதலும் உள்ள விசுவாசமுள்ள பிள்ளைகள் ஆக இருக்க வேண்டும்.

**4. நூதன சீஷனாயிராதவன்**

ஒரு மூப்பர் தொடக்க நிலையில் உள்ளவராக இருக்கக்கூடாது. ஒரு நூதன சீஷன் என்பவன் அனுபவம் அற்றவனாகவும், முதிர்ச்சியின் மை காரணமாக திறமை இல்லாதவராகவும் இருக்கிறான் "மூப்பர்" என்ற வார்த்தையே முதிர்ச்சியும் அனுபவமும் உடைய ஒருநபர் என்பதை குறிப்பிடுகிறது. புதிதாக மனமாற்றம் அடைந்த ஒரு அங்கத்தினர் மூப்பராக இருக்க முடியாது. ஒரு நூதன சீஷன் பெருமையுடனே தன்னை மேன்மைப்படுத்திக் கொள்ளுகிற அபாயத்திலும் பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழுந்து போகிறவனாகவும் இருக்கிறான். (1தீமோ.3:6). அவன் இன்னும் பொறுப்பேற்று நடத்தும் நிலைக்கு ஆயத்தம் ஆகாதவனாகவும் இருக்கிறான். முதிர்ச்சி அடையாதவனாகவும் இருக்கிறான். முதிர்ச்சியடைவதற்கு தேவையான வருஷங்களின் எண்ணிக்கையை வேதாகமம் சொல்லுகிறதில்லை, ஆனால் அது முதிர்ச்சிக்கான குணாதிசங்களை நமக்கு சொல்கிறது. ஒரு மனுஷன் இந்த விசேஷமான குணாதிசயங்களில் ஒருவேளை ஒருசில வருஷங்களில் விருத்தியடைலாம், அதேசமயம் மற்றொருவருக்கு பல வருஷங்கள் ஆகலாம். ஒரு வாலிபனாயிருக்கிறவனுக்கு ஞானத்தை அளிக்க வயதும், அனுபவமும் தேவையாய் இருக்கிறது. ஒரு மூப்பராக இருக்கிறவர் ஒரு நூதன சீஷனாகவோ அல்லது தொடக்க நிலையில் உள்ளவராகவோ இருக்கிறதில்லை.

**5. புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன்**

ஒரு மூப்பரானவர் அங்கத்தினரல்லாதவர்களிடமிருந்து ஒரு நற்பெயர் பெற்றவராக இருக்க வேண்டும் (1தீமோ.3:7) அவருடைய செல்வாக்கு அல்லது பொதுமதிப்பீடு புறம்பானவர்களுடைய நிந்தனைக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அவருடைய நல்ல குணாதிசயத்தை அவருடன் பணியாற்றுகிற ஜனங்கள், சிநேகிதர்கள் மற்றும் அறிமுகம் ஆனவர்கள் மதிப்பார்கள். இருளில் இருக்கிறவர்களுக்கு அவர் ஒரு வெளிச்சமாக இருப்பார் (மத்.5:14). மனுஷர் அவருடைய நற்கிரியைகளைக் கண்டு தேவனை மகிமைப்படுத்தும்படி அவருடைய வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்க கடவது (மத்.5:16) விசுவாசியாய் இராதவர்களும் அவருடைய நல்ல ஜீவியத்தை கண்டு அவரை கனம் பண்ணுவார்கள். எப்பொழுதுமே கிறிஸ்தவரல்லாதவர்கள் நம்மை குற்றஞ்சாட்டும் படியாக கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் குற்றஞ்சாட்டுவதற்கு பதிலாக ஒரு மெய்யான கிறிஸ்தவனுடைய ஜீவியத்திற்கு மதிப்பளிக்கிற பொழுது, அது கிறிஸ்தவனுக்காக நன்மையானதை பேசுகிறது. அப்படிப்பட்ட ஒரு மனுஷனே ஒரு மூப்பராக இருக்கக்கடவன். அவன் எங்கே ஜீவிக்கிறானோ அந்த சமுதாயத்திலே அவனுடைய நல்ல ஜீவியத்திற்காக அவன் அறியப்பட்டவனாக இருப்பான். இதுவே புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவன் என்பதன் பொருளாக இருக்கிறது.

**6. தேவனுடைய ஒரு உக்கிராணக்காரன்**

ஒரு மூப்பனாக இருக்கிறவன் ஒரு குற்றஞ்சாட்டப்படாத தேவனுடைய உக்கிராணக்காரனாக இருக்க வேண்டும் என்று தீத்து1:7 சொல்கிறது. ஒரு உக்கிராணக்காரன் என்பவன் தன்னிடத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட மதிப்பானவகளை குறித்து திறமை மற்றும் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையவன். விலையேறப்பெற்ற உடைமைகளுக்கு காப்பாளராக இருக்கிறவர் அவர் தன் எஜமானுடைய உடைமைகளை கவனமாய் காக்கிறதற்கு பொறுப்புடையவராக இருக்கிறார். இதற்கு எப்பொழுதும் உண்மை உள்ளவராயிருக்கிற ஒரு உக்கிராணக்காரன் தேவையாயிருக்கிறார் (1கொரி.4:2) ஒரு மூப்பருடைய பொறுப்பில் மதிப்புள்ளவைகளாக விடப்படுகிறவைகள் உறுப்பினர்களுடைய விலையேறப்பெற்ற ஆத்துமாக்கள் (எபி.13:17) அவர்களைக் குறித்து அவர் கணக்கு ஒப்புவிக்க தாங்கிக் கொள்ளக் கூடியவராக இருக்கிறார். சோர்வடையும்

தருணங்களில் அவர் எளிதாக அதை விட்டு விடுகிறதில்லை. அவர் சரியானவராகவும் உறுதியாய் தரித்திருக்கிறவராகவும் இருக்கிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்திலும் பொறுமையானது கூட்டி வழங்கப்பட வேண்டும் (2பேதுரு 1:6). விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குகிறது. (யாக்.1:3).

இன்னல்கள் வரும்பொழுது அதை தாங்கிக் கொள்வோமேயாகில் அது தேவனிடத்தில் நம்பிக்கையை கொண்டு வருகிறது. மூப்பர் ஒருவருடைய பொறுமையின் காரணமாக அவர் மற்றவர்களுடைய உபத்திரவங்களிலே அவர்களை உற்சாகப்படுத்தும் திறமையுள்ளவராகிறார். சபை அங்கத்தினர்கள் சோதனையின் மத்தியில் ஆலோசனைக்காக அடிக்கடி அவரை சார்ந்திருக்கிற படியால் சாந்தகுணமுள்ளவராகவும், பகுத்தறியக் கூடியவராகவும் இருக்கிறார். சபையின் கலந்துரையாடல்கள், சச்சரவுகளாக மாறாத படிக்கு காத்துக் கொள்வதில் அவர் உதவியாக இருக்கிறார். அவர் பிராந்திய சபையை நிலையானதாகவும், நன்கு தீர்வு செய்யப்பட்டதாகவும் செய்கிறார். பொறுமை மிகவும் மேம்பட்ட விசேஷமான குணமாகவும், ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் மிகவும் அத்தியாவசியமாக தேவையானதாகவும் இருக்கிறது. மூப்பர்கள் பொறுமையில் முன்மாதிரிகளாக இருக்கிறார்கள்.

**கேள்விகள்**

1. உபசரித்தல் என்பதற்கு ஒரு சிறிய பொருள் கொடுக்கவும் ________________________
2. இது ______________காகவும் சொல்லப்பட்டிருக்கிறது, ஆனால் விசேஷமாக யாருக்காக? __________________
3. "போதக சமர்த்தன்" என்பதற்கு ஒரு சிறிய அர்த்தம் கொடுக்கவும் _______________
4. "போதகத்திற்கான 7 வசனங்களை வரிசைப்படுத்தவும்
5. திராட்சரசத்தின் 2 முறையான பயன்படுத்தல்களை சொல்லவும் _______________
6. "அடிக்கிறவன்" என்றால் என்ன? ________________________________
7. அடித்தலுக்கு 2 சரியான முன் உதாரணங்களை குறிப்பிடவும் ___________________
8. இழிவான ஆதாயம் என்பது என்ன? _________________________________
9. "பொருளாசை"யை குறிப்பிடும் 7வேத வசனங்களை சொல்லவும்
10. "பொறுமை" என்பது என்ன?

## *நடப்புச் செய்திகள்*

- **மின்சார வாகனங்களை வைத்திருப்பவர்கள் எங்கு சார்ஜ் தீர்ந்துவிடுமோ என்ற அச்சம் இல்லாமல் பயணிக்க புதி முயற்சியை பிபிசிஎல் (BPCL) நிறுவனம் எடுத்துள்ளது.**
- **இந்தியாவிலேயே முதல் முறையாக மும்பையில் போக்குவரத்து நெரிசலை குறைக்க கடல் வழி டாக்சி அறிமுகம்.**
- **சென்னை உட்பட இந்தியாவின் முக்கியமான 8 நகரங்களில், வீடுகளின் விலை 3 முதல் 7 சதவீதம் வரை அதிகரித்திருப்பது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.**

# நீதிக்கு "கல்வாரி வரை" அநீதி

*உருகுது உள்ளம் பெருகுது கண்ணீர் பதறுது நெஞ்சம்!*
*நியாயத்தை காலை தோறும் உபதேசித்து விளங்கப்பண்ணினார் – செப். 3:5*
*நியாயத்தை நஞ்சாகவும், நீதியின் கனியை எட்டியாகவும் மாற்றினார்கள் – ஆமோ. 6:12*
*குற்றமுள்ள கொலை மாபாதகனுக்கு சாதகமான தீர்ப்பு – விடுதலை! – லூக். 23:25*
*குற்றமில்லா நீதிபரருக்கு பாதகமான தீர்ப்பு – படுகொலை! – மாற். 15:15*
*மகிமையினாலும், கனத்தினாலும் பசும் பொன்னால் முடி சூட்டப்படவேண்டியவருக்கு,*
*பரியாசம்பண்ணி எள்ளி நகையாடி முள்முடி சூட்டினார்கள்!*
*அவருடைய காயங்கள் ஆழமானது (அதைவிட) – ஏசா. 53:5*
*அவருடைய நியாயங்கள் மகா ஆழமானது – சங். 36:6*
*அவமானத்துக்கும் உமிழ் நீருக்கும் தன்முகத்தை மறைக்கவில்லை!*
*அவமானத்தை எண்ணாமல் சிலுவையை சகித்து ஏற்றுக்கொண்டார்*
*சிலுவையின் பாரத்தால் தள்ளாடிய கால்கள்*
*சிலுவையோடு கை கால்களில் அறையப்பட்ட ஆணி சிதைந்து உருக்குலைந்தது அவர் சரீரம்!*
*தாகமாயிருக்கிறேன் என்றவருக்கு பருக முடியாத கசப்பு கலந்த தண்ணீர்!*
*அவருடைய ஆடையை உரிந்து உரிமை கொள்ள அதன் பேரில் போட்டார்கள் சீட்டு!*
*அவருடைய ஊழியத்திற்கென்று வந்த எனக்கு எதற்கு மேட்டிமையான கோட்டு சூட்டு?*
*நீதிக்கு கல்வாரி வரை அநீதி, உருகுது உள்ளம், பதறுது நெஞ்சம், பெருகுது கண்ணீர்!*

## இயேசு சிந்திய இரத்தத்தால்...

**காய்ந்த மண்ணும் கட்டாந்தரையும் கூட ஈரமானதே!**
**(நமக்காக) இயேசு சிந்திய இரத்தத்தைப் பார்த்தும் கூட இன்னும்;**
**மானிட நெஞ்சங்கள் ஈரமாகவில்லையே!**
**அவரை ஏற்றுக்கொள்ளவில்லையே!**
**இரக்கமற்றவர்கள் மத்தியிலே இரக்கமுள்ள இயேசு**
**சிலுவையில் தொங்கிய கள்ளனை இன்று என்னோடு பரதீசுவிலிருப்பாய் என்றாரே**
**இரக்கமும் மனஉருக்கமும் நீடிய சாந்தமுமுள்ள இறைமகன் இயேசு**
**உனக்கும் எனக்கும் கூட இரக்கம் காட்டுவார்...**





- **K.S.** *மாணிக்கவாசகம், திருச்சி*

பாடம்: 2

# விசுவாசமும் விசுவாச வீரர்களும்

## Faith and Faith Knights - K.R.K.Ravi Asir

**ரோமர் 12:12.** தேவனிடத்தில் நாம் கொள்ளும் நம்பிக்கையில் நாம் உறுதியாயிருக்க வேண்டுமேயாகில் அது மனப்பூர்வமானதாக, மனவிருப்பத்துடனே கூடியதாக இருக்க வேண்டும். நம்மைவிட முதியவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காகவோ, நமக்கு நெருக்கமானவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காகவோ, பிரியமான சிநேகிதர்கள் சொல்கிறார்கள் என்பதற்காகவோ நம்மிலே தேவனுக்கேற்ற நம்பிக்கை உருவாகிறதில்லை. நம்முடைய ஆத்துமாவுக்கு நாமே உத்தரவாதி. ஏனென்றால் நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார், பிரசங்கி12:14. "விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக் கடவன்" என்று வெளி. 22:14 கூறுகிறது. எனவே, விருப்பமுள்ளவன்தான் விசுவாசம் உள்ளவனாக இருக்க முடியும். ஆண்டவர் இயேசு **"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" (யோவான் 7:38).**

இதை நீங்கள் நம்புகிறீர்களா? ஏனென்றால் ஆண்டவராகிய இயேசு, "கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை, என்றாலும் சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?" (மத். 6:27-30) என்று சொல்லியிருக்கிறார். கவலைப்படுகிற நண்பர்களே, பிரியமானவர்களே இவைகள் மனுஷருடைய வார்த்தையல்ல. எனவே இதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

இவைகள் சாத்தியமா என்ற கேள்வி உங்கள் மனதில் எழக்கூடும். ஏனென்றால் ஆண்டவராகிய இயேசு, "உங்களுககு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?" என்று கேட்டு தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்துகிறார். நிச்சயமும், உறுதியுமான இவ்வார்த்தைகளை நாம் உறுதியாய்ப் பற்றிக்கொள்வோம். "நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்" (எபி. 3:14). "சகோதரரே, ஜீவனுள்ள தேவனைவிட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்" (எபி. 3:12). அவிசுவாசமுள்ள இருதயம் பொல்லாததாயிருக்கிறது. கர்த்தராகிய தேவனை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களேயாகில் உங்கள் இருதயம் பரிசுத்தமானதாக மாறும்.

இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள் (மத். 5:8). தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார் (யோவான் 1:18). அப். பவுலும் "நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்" என்று உரைத்திருக்கிறார். (2 கொரி. 5:16). "ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" (2 கொரி. 4:18). நித்தியமானவைகளை நம்புவதில் உங்களுக்கு எதுவும் பிரச்சனையா?



பெண்கள் பகுதி

# சபைக்கு ஊழியஞ்செய்தல்

## Serving The Church

*-Glory Arjunan*

சபை என்பது என்ன? இந்த வானத்தையும் பூமியையும் படைத்த ஒரே தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தம் முழுவதையும் சிந்தி சம்பாதித்த ஜனக்கூட்டமே சபை. ஆம், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் பாவமற கழுவப்பட்டு ஒரே சிந்தையோடு கூட தேவனை தொழுது கொண்டு வருகிற அந்த மக்களின் கூட்டம் தான் சபை. அன்பு சகோதரியே, நீங்கள் இந்த ஜனக்கூட்டத்தில் ஒருவராயிருப்பீரென்றால், இந்த முழு சபைக்கும் ஊழியஞ்செய்ய உங்களை அர்ப்பணிப்பீர்களா? இந்த சபையில் உங்களை அங்கமாக்க இயேசு உங்களுக்காக மரித்தாரே! மரித்து உயிரோடிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இன்றும் "சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார்" (எபே.5:29). கிறிஸ்துவே தலையாயிருக்கிற இந்தச் சபை பலுகிபெருகி விருத்தியடைய இதற்கு ஊழியஞ்செய்ய உங்களை அன்புடன் வேண்டிவிரும்பிக்கேட்டுக்கொள்கிறேன். கி.பி. முதல் நூற்றாண்டில் சபைக்கு ஆதரவாகவும், சபைக்காகப் பிரயாசப்பட்டவர்களாகவும், சுவிசேஷவிஷயத்தில் பிரயாசப்பட்டவர்களுமான சில ஸ்திரீகள் இருந்திருக்கின்றனர். அப்பேர்பட்ட ஸ்திரீகளை நமக்கு மாதிரியாக நோக்குவோம்.

கெங்கிரேயா ஊரிலிருந்த கிறிஸ்துவின் சபைக்கு பெபேயாள் என்ற சகோதரி ஊழியக்காரியாக இருந்தாள். அவளைப் பற்றி பவுல் கூறும்போது "......அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள்" (ரோம.16:1,2) என்கிறார். **She was a succored. ஒத்தாசையாக, ஆபத்துக்காலத்தில் உதவுகிறவளாக, தேவையான பொழுது உதவுகிறவளாக இருந்திருக்கிறாள் என்று பொருள்.** அன்பு சகோதரியே, இன்றைய தேவை என்ன? ஆபத்துக்காலத்தில், அதாவது பாவப்பிடியிலும், உலக சிற்றின்பங்களிலும், உலகக்கவலையிலும் சிக்குண்டு கொஞ்சம் கொஞ்சமாக தங்களுடைய சரீரங்களையும், தங்கள் ஆத்துமாக்களையும் அழித்துக்கொண்டு ஆபத்தான சூழ்நிலையில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதல்லவா உண்மையான தேவையாயிருக்கிறது. **'A friend in need is a friend indeed' என்ற ஆங்கிலப் பழமொழியை நாம் நன்கு அறிவோம். ஆபத்தில் உதவுபவனே நண்பன்.** மனிதநேயம் வேண்டுமென்று வாயளவில் சொல்லிக்கொண்டு கிரியை செய்யாமல் இருப்போமானால் வஞ்சகர்களாக இருப்போம்.

இன்று கிறிஸ்துவின் சபை வளர்ச்சியடையாமலிருப்பதற்கு நம்மிலுள்ள கிரியையில்லாத விசுவாசமே காரணம் என்று தான் சொல்லவேண்டும். "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:27) என வாசிக்கிறோம். இயேசுவானவர் தம்முடைய சபைக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து நம்மை கறைதிரையற்றவர்களாக, பிழையற்றவர்களாக, பரிசுத்தமுள்ளவர்களாக நிலைநிறுத்தவே இவ்வுலகத்திற்குக்

கடந்து வந்தார். இந்த நற்செய்தியை கிறிஸ்துவை பெற்றிராதவர்களுக்கு அறிவித்து அவர்களை வரவிருக்கும் ஆபத்திற்கு, நரகாக்கினைக்குத் தப்புவிக்க ஒத்தாசையாக இருப்போம். பவுல் மற்றும் அநேக ஊழியர்களுக்கு பெபேயாள் ஆதரவாயிருந்ததைப் போல கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உபதேசிக்கிற பரிசுத்தவான்களுக்கு உதவியாயிருப்போம்.

மேலும் பவுல் மரியாள் என்ற சகோதரியைக் குறித்து ரோமர்16:6-ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். ‘‘எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்’’. பவுலுக்கும் அவரோடே கூட இருந்த உடன் ஊழியர்களுக்காகவும் மிகவும் பிரயாசப்பட்டிருக்கிறாள் இந்த மரியாள். ஆங்கிலத்தில் **Mary bestowed much labour on us** என்றெழுதபட்டுள்ளது. அவர்களை அதிகமாகத் தாங்கியிருக்கிறாள் அல்லது கஷ்டப்பட்டு அவர்களுக்காக உழைத்திருக்கிறாள். பாருங்கள், அன்றைய நாளில் ஒரு பெண் தனித்தவளாக கர்த்தருடைய ஊழியத்தில் பிரசங்கியார்களுக்காகப் பிரயாசப்பட்டிருக்கிறாள்! இவளைப் போல திரிபேனாள், மற்றும் திரிபோசாள் என்பவர்களும் கர்த்தருக்குள் பிரயாசப்பட்டிருக்கிறார்கள் என்று ரோமர்16:12-ல் வாசிக்கிறோம்.

எனது அன்பு சகோதரியே, நீங்கள் எப்படி? கர்த்தருடைய ஊழியர்களுக்கு சபை வளர்ச்சிக்கென்று உதவியாயிருக்கிறீர்களா? உங்களுக்காக மரித்த கிறிஸ்து இயேசுவுக்காகவும் அவருடைய சபைக்காகவும் பிரயாசப்படுகிறீர்களா? சற்றே உங்களைக் குறித்து சிந்தித்துப்பார்க்கும்படியாக உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

பவுல், இன்னும் சில ஸ்திரீகளைக் குறித்து பிலிப்பியர்4:2,3 வசனங்களில் குறிப்பிடுகிறார். எயோதியாள், மற்றும் சிந்திகேயாள் இருவரும் கிலேமெந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடுங் கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது என்கிறார். சுவிசேஷ விஷயத்திலுங்கூட நாம் மிகவும் பிரயாசப்படவேண்டியவர்களாக இருக்கிறோம். அன்பு சகோதரியே, ஒருவேளை உங்களுடைய கணவன் ஒரு சுவிசேஷகராயிருந்தால், சுவிசேஷ விஷயத்தில் அவர்களோடு கூட நீங்களும் பிரயாசப்பட முடியும். வீட்டிலிருக்கிற வேலைகளைப் பார்க்கவே நமக்கு நேரமில்லை, பின் எப்படி கணவனோடு கூட சுவிசேஷ விஷயத்தில் ஒத்துழைக்க முடியும் என நினைக்கலாம். கிறிஸ்துவுக்குள் பவுலுக்கு உடன்வேலையாட்களாக பிரிஸ்கில்லாள், ஆக்கில்லா என்ற தம்பதியினர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் நமக்கு நல்ல மாதிரிகளல்லவா! ஒருமுறை இந்தத் தம்பதியினர் கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக் கொண்டுவந்த அப்பொல்லோ என்பவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப்.18:25,26). இந்த பிரிஸ்கில்லாள் தன் கணவன் ஆக்கில்லாவோடு சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்பட்டிருப்பது நம்மை உற்சாகப்படுத்தவில்லையா? நமக்காக மரித்து நம்மை பரிசுத்தமாக்கியவருடைய சுவிசேஷ விஷயத்தில் நாமும் பிரயாசமெடுத்துக் கொள்வோம். அப்பொழுது கர்த்தருடைய சபைக்கு ஊழியஞ்செய்கிறவர்களாயிருப்போம்.

இயேசுகிறிஸ்து இப்பூமியில் மனுஷனாக வாழ்ந்தபோது, பொல்லாத ஆவிகளின் பிடியிலிருந்தும் வியாதிகளின் பிடியிலிருந்தும் நீங்கி குணமான சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் (அரண்மனையில் வேலைசெய்தவனின்) மனைவியாகிய

யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்து கொண்டுவந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவரோடு இருந்தார்கள்.

அன்பு சகோதரியே, உங்களால் ஒருவேளை ஊழியர்களுக்கு ஆதரவாகவும், சுவிசேஷ விஷயத்தில் பிரயாசப்படவும் முடியவில்லையென்றால் நீங்கள் சேர்த்துவைக்கும் பொருட்களையும், பணத்தையும், பூச்சியும் துருவும் அழித்துப் போட்டுவிடும். அழிந்துபோகிற உங்கள் பொக்கிஷங்களால், கர்த்தருக்கும் அவருடைய சபைக்கும் ஊழியஞ்செய்யக்கூடாதா? வாயிருந்தும் பேசாத, கண்களிலிருந்தும் காணாத, கால்களிருந்தும் நடவாத தேவனற்ற எத்தைனையோ காரியங்களுக்கு கோடி கோடியாக காணிக்கை செலுத்தும் இந்த பூமியில், அண்டசராசரங் களுக்கெல்லாம் ஒரே தேவனாயிருக்கிறவர் வாசஞ்செய்யும் பரலோகத்திற்கு உங்களை கொண்டு செல்லும் ஒரே சபையாகிய கர்த்தருடைய சபைக்கு உங்கள் ஆஸ்திகளால் ஊழியஞ்செய்யுங்கள்.

ஸ்திரீகளாகிய நாம் சபையில் பேசவும், உபதேசம் பண்ணவும் அனுமதிக்கப்படவில்லை என்ற போதிலும் சபைக்கு ஊழியஞ்செய்யும்படி சபைக்கும், ஊழியர்களுக்கும் ஆதரவாகவும், அவர்களுக்காகப் பிரயாசப்படவும் சுவிசேஷத்திற்காக மிகவும் பிரயாசப்படவும் நம்முடைய ஆஸ்திகளால் இயேசுவுக்கு ஊழியஞ்செய்யவும் நமக்கு ஏதுக்கள் உண்டு அல்லவா? அவகைளைப் பயன்படுத்தி கர்த்தருடைய சபை பலுகிப்பெருக நம்மை அர்ப்பணிப்போம். கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ்துவையும், அவரால் உண்டாகும் நித்திய ஜீவனையும் பற்றி அறிவிப்போம். கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு அவருடைய சபையில் அங்கமாயிருப்பவர்களாகிய நாம் அவருடைய சபைக்கு ஊழியஞ்செய்ய தீவீரமாய் புறப்படுவோம். கர்த்தர் தாமே நம்மைப் பெலப்படுத்துவாராக! அதற்குரிய ஞானத்தையும் புத்தியையும் தேவன் உங்களுக்கு அருளும்படி நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## ஜெபியுங்கள்



- **ஏப்ரல் மாத ஊழியங்களுக்காக தேவனுக்கு நன்றி சொல்லி...**
- **மூன்று மாதங்களை கடந்து நான்காவது மாதத்தை காணசெய்த தேவனுக்கு நன்றி சொல்லி...**
- **கொரோனாவைக் காட்டிலும் கொடிதான பாவத்திலிருந்து ஜனங்கள் விடுபட...**
- **சகல தேசத்திற்கும் தேவனுடைய சத்தியம் சென்றடைய...**
- **WEBS ன் புதிய மாணவர்களுக்காக...**
- **தமிழகத்தில் நடைபெற்றுவரும் கர்த்தருடைய ஊழியத்திற்காக...**
- **பிள்ளைகளுடைய எதிர்கால வாழ்க்கை பாதிப்படையாதிருக்க...**



**The Word of Christ**
**Canara Bank A/c No.094620100552**
**IFSC:CNRB0000946**

**மாத இதழுக்கான**
**சந்தா செலுத்த இரு வழிகள்**

**India Post Payments Bank**
**ARJUNAN**
**048410018536**
**IPOS0000001**

சிறுவர் பகுதி



## யோவான் ஸ்நானகன் - John the Baptist

அந்நாட்களில் ஒரு ராஜா வருகிறார் என்றால் அவரது வருகையைப் பற்றித் தெரிவிப்பதற்கு ஒரு ரேடியோவோ, டெலிவிஷனோ, செல்போனோ அல்லது தபால்சேவையோ போன்ற எந்த தொடர்பு சாதனமும் கிடையாது. இந்த பூமிக்கு ஒரு ராஜா வரப்போகிறார். அவர் உலகமக்களின் பாவங்களை நீக்கி பரிசுத்த வாழ்வைத் தருவார், மக்கள் சந்தோஷமும் சமாதானமும் பெறுவார்கள். எனக்குப் பின் வருகிறவர் என்னைக் காட்டிலும் வல்லவர், அவர் மேன்மையுள்ளவர், என்று இயேசு வரப்போகிறார் என்ற செய்தியை அறிவிப்பதற்கென்றே பிறந்தவர்தான் இந்த யோவான் ஸ்நானகன்! இவர் மிகுந்த தைரியசாலி. எப்படி என்று தானே நினைக்கிறீர்கள்.

ஆம், இந்த யோவான் ஸ்நானகன் வனாந்தரத்தில் அதாவது காட்டில், எளிமையாகவும் தனியாகவும் வாழ்ந்தவர். காட்டில் எத்தனை மிருகங்கள் இருக்கும்! அதற்கெல்லாம் இவர் பயப்படவேயில்லை. அதுவும் காட்டில் இவர் சாப்பிட்ட சாப்பாடு என்னதெரியுமா? வெட்டுக்கிளியும், காட்டுத்தேனும் தான். ஆ... வெட்டக்கிளியா? காட்டுத் தேனா? என்று தானே கேட்கிறீர்கள். ஆமா, இவர் இவைகளைத்தான் சாப்பிட்டு வந்தாரு. அது மட்டுமா இயேசு ராஜா வரப்போகிறார் அவரைச் சந்திக்கத் தயார் ஆகுங்க "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்" இவர் பிரசங்கத்தைக் கேட்டு நிறைய பேர் மனந்திரும்பினாங்க, ஞானஸ்நானம் எடுத்தாங்க எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தாரும் இன்னும் பெரிய பெரிய அந்தஸ்து உள்ளவர்கள் எல்லாம் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற்றாங்க. இவர் ஒரு பெரிய தீர்க்கதரிசியும் கூட, அதனால் தான் இயேசு வரப்போகிறார் என்று சொன்னாரு.

இப்பேர்பட்ட இந்த யோவான்ஸ்நானகன் என்ன dress போட்டிருந்தாரு தெரியுமா? ஒட்டக ரோமத்தினால் ஆன உடையைத் தரித்து, இடுப்பில் வார்க்கச்சை அதாவது belt கட்டிக்கொண்டிருந்தாராம். எல்லாரும் இவரைப் பார்த்து இவர் தேவனுடைய மனுஷன் என்று சொல்லி பயந்திருந்தாங்க. ஆனா இவர் மட்டும் எந்த பெருமையும் கொள்ளாமல், எனக்கு பின்னாக இயேசு வராரு, அவர் பெரியவர், வல்லவர் மேன்மையுள்ளவர், என்று சொல்லி மகிமைப்படுத்தினார். பார்த்தீங்களா, தம்பி தங்காய்! நம்மைப் பார்த்து யாராவது பெருமையாகப் பேசினால், உடனே பெருமைப்படக்கூடாது. இந்த யோவான் ஸ்நானகனைப்போல 'இயேசு பெரியவர்' என்று பறைசாற்றனும். செய்வீங்களா? O.K. Bye!

**மனப்பாடவசனம்**

**"...பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்"... - 1பேது.5:5**

## வேத அறிவுப் போட்டி எண்: 260

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. யாருடைய தலையை எடுத்து எப்ரோனிலிருக்கிற அப்னேரின் கல்லறையிலே அடக்கம்பண்ணினார்கள்?
2. கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், எவர்களை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்குவைக்கவும் அறிந்திருக்கிறார்?
3. பொன்னினால் இரண்டு கன்றுக்குட்டிகளை உண்டாக்கி, ஒன்றைப் பெத்தேலிலும், ஒன்றைத் தாணிலும் ஸ்தாபித்தவன் யார்?
4. அன்பிலே என்ன இல்லை? பூரண அன்பு எதைப் புறம்பே தள்ளும்?
5. எருசலேம் தேவாலயத்திலே தோப்பு விக்கிரகத்தை வைத்த ராஜா யார்?
6. வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவர் எவர்?
7. எந்த ஞானதிருஷ்டிக்காரன் தாவீதினிடத்தில் மூன்று காரியங்களை வைத்து அவைகளில் ஒரு காரியத்தைத் தெரிந்து கொள் என்றான்?
8. எங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை?
9. எந்த ராஜா செத்த முகமாய்த் தன்தேசத்திற்குத் திரும்பினான்?
10. இயேசுவினால் பிசாசு துரத்தப்பட்டபின்பு எவன் பேசுவதைப் பார்த்த ஜனங்கள் ஆச்சரியப்பட்டு இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை என்றார்கள்?

## வேதாகம ஆய்வு... 45

### ஏனோக்கு - Enoch

1. ஏனோக்கு என்றால் பிரதிஷ்டை
2. 300 வருஷம் தேவனோடு சஞ்சரித்தவன் – ஆதி.5:22
3. ஏனோக்குடைய நாட்கள் 365 – ஆதி.5:23
4. 969 வருஷம் உயிரோடு வாழ்ந்த மெத்தூசலாவைப்பெற்றவன் – ஆதி.5:22
5. மரணத்தைக் காணாமல் எடுத்துக் கொள்ளப்பட்டான் – எபி.11:5



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2021-2023
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2021-2023
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month at Batlagundu Post office.
April 2022




"இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச்செய்தீர்களோ,
அதை எனக்கே செய்தீர்கள் என்று
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" மத்தேயு 25:40

Cell : 94435 58041
6379350509
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

*Every Tuesday 6.00 P.M on Tamilan TV*
*Every Thursday & Sunday 6.00 P.M on Heaven TV*
*Every Saturday 8.00 P.M on Nambikkai TV*

YouTube: the word of christ

To

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan from
17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



